# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு2007 | துல்ஹஜ்தா 6 | கார்த்திகை13(28-11-76)ஞாயிறு | புத்தகம்30 | இதழ்63


## இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இரங்கற் கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளை 28 11-76 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் **அமரர் திருச்செல்வம்** மறைவுக்கு இரங்கற் கூட்டம் ஒன்றை நடத்துகிறது. திரு, ஈழவேந்தன் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் நாவலர் அ அமிர்தலிங்கம் அவர்களுட்பட கூட்டணித் தலைவர்கள் உரையாற்றுகிருர்கள்!

# அழுதகண்ணீருடன் ½ லட்சம் மக்கள் அஞ்சலி!

# 'திரு'வின் பூதவுடல் தகனம்!

## சிங்கள ஸ்ரீலங்கா, தமிழ்ஈழ நாடுகளின் தலைவர்கள் அமரருக்கு இறுதி மரியாதை!


### தமிழீழத் தேசியகீதம், தேசியக்கொடியுடன் கொழும்பில் நடந்த இறுதி யாத்திரை!

அரை இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக இறுதி அஞ்சலி செலுத்த—தமிழ் ஈழத்தலைவர்களும், சிங்கள நாட்டுத் தலைவர்களும் இறுதி மரியாதை செய்ய—தமிழீழத்தின் தேசிய கீதம் முழங்க—தமிழ் ஈழத்தின் தேசியக் கொடியான உதயசூரியன் கொடியைத் தாழ்த்தி தமிழர் விடுதலைக்கூட்டணித்தொண்டர்கள், தமிழ் இளைஞர்பேரவை வீரர்கள், தமிழ் மகளிர் பேரவையின் வீராங்கனைகள், மொழிவழித்தொழிற்சங்கங்களின் தலைவர்கள் ஆகியோர் இறுதி வணக்கம் செய்ய— மறைந்த மாபெரும் சட்டமேதையும் தமிழீழ விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான அமரர் முருகேசு திருச்செல்வம் அவர்களின் பூதவுடல் கொழும்பு பொரளையிலுள்ள கனத்தை இந்து மயானத்தில் இந்து சமய ஆசாரப்படி 24-11-76 புதன் கிழமை மாலை சரியாக 6மணிக்கு தகனம் செய்யப்பட்டது.

இதற்கு முன் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தின்போது தலைவர்களும் பொதுமக்களும் சுமார் இரண்டு மைல் தூரம் அமரரின் பூதவுடலைத்தாங்கிய வாகனத்தை இழுத்துச்சென்றனர்.

21-11-76 நள்ளிரவு திடீரெனக் காலமான திரு. மு.திருச்செல்வம் அவர்களின் இறுதிக்கிரியைகள் 24-11-76புதன்கிழமை அன்று நடைபெற்றது. இதையொட்டி கொழும்பிலும், தமிழ் ஈழத்திலும் கடைகள் மூடப்பட்டு கறுப்புக்கொடிகள் உயர்த்தப்பட்டு பூரண துக்கதினம் அனுட்டிக்கப்பட்டது.





மறைந்த அமரர் திருச்செல்வத்தின் பூதவுடல் மலர்வளையங்களுக்கிடையே காணப்படுவதையும் இறுதி ஊர்வலத்தில் அமரரின் பூதவுடலைத் தாங்கியமோட்டார் இரதத்தை தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களும், பிரமுகர்களும் இழுத்துச் செல்வதையும் படத்தில் காணலாம்.

### தமிழ் ஈழத்தில் கடையடைப்பு!

யாழ்ப்பாணத்தில் புதன் கிழமை பிற்பகல் அனைத்துக் கடைகளும் மூடப்பட்டு கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. வவுனியாவிலும் கடையடைப்பு நடைபெற்றது. இதை வவுனியா இந்துவர்த்த[illegible] ஊழியர் சபை முன்[illegible]று நடத்தியது.

திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னுர் போன்ற நகரங்களிலும் கடைகள் பூட்டப்பட்டு எங்கும் பூரண துயரம் காணப்பட்டது.

### கொழும்பிலும்...

கொழும்பில் செட்டியார் தெரு, செக்கடித்தெரு, நாலாம் குறுக்குத்தெரு போன்ற இடங்களில் எல்லாம் தமிழ்பேசும் மக்களின் கடைகள் அடைக்கப்பட்டுக் காணப்பட்டன. வெள்ளைக் கொடிகளும் எங்கும் காணப்பட்டன. கடை முதலாளிகள் அமரரின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்கு தமது சிப்பந்திகளுக்கு அனுமதிவழங்கியிருந்தனர்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் — தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை ஆகியவற்றின் கொழும்புக் கிளைகள், நடைமுறைத் தமிழியக்கம், துறைமுக வழிகாட்டி நிலைய

—4-ம் பக்கம் பார்க்க

### அடுத்த இதழ் சுதந்திரனில்...

[illegible]அமரர் திருச்செல்வத்தின் இறுதி யாத்திரைப் படங்கள் அடுத்த சுதந்திரன் (5-12-76) இதழில் இடம்பெறும்.

—ஆர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# 'தமிழ்ஈழப் பிரச்சினையை உலகறியச் செய்தவர் அமரர் திருச்செல்வம்!'

'முன்னாள் உள்ளூராட்சி அமைச்சரும், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான எம். திருச்செல்வம் அவர்களது மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். அன்னரது மரணம் தமிழ் ஈழத்துக்கு ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பாகும்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் வருவதாக இருந்த "திருவின்" அறிவுரையை யாழ். நகர் தமிழ் இளைஞர் கேட்கவேண்டுமென்பதற்காக அன்றுமாலை 6-30 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பணியகத்தில் விசேட கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். காலநிலைகாரணமாககொழும்பில் இருந்து அன்னர் பலாலிக்குப் புறப்பட விருந்த விமானம் இரவு 7-30 வரை பயணத்தை ஆரம்பிக்கவில்லை. ஆதலால் 'திருவின்' கடைசிப் பேச்சைக்கேட்கும் வாய்ப்பை யாழ். நகர் தமிழ் இளைஞர் தவறவிட நேர்ந்தது. அப்போதுதானும் எதிர்வரவிருந்த இப்பெரும் இழப்புக்கான முன்னறிவிப்பே அக் கருத்தரங்கில் அவர் பேச முடியாது நேர்ந்தது என்பதை நாம் உணராது போனேம். நீதிமன்றத்தில் தமிழ் ஈழத்தின் பண்டைய வரலாற்றைத் தமக்கே உரித்தான ஆணித்தரமான வாதங்களால் நிறுவுவதில் அவர் அடைந்தவெற்றிக்கு அத்தாட்சி அவரது எதிர் வாதம். வார்த்தைக்கு வார்த்தை அப்படியே அமிர்தலிங்கம் வழக்கில் நீதிபதிகளது தீர்ப்பிலும் இடம் பெற்றிருப்பது.

அண்மையில் நடைபெற்ற உச்சி மாநாட்டின்போதும் வெளிநாடுகளில் இருந்து வந்த பத்திரிகையாளர்களைத் தமது இல்லத்துக்கு அழைத்து அவர் நடத்திய பத்திரிகை மாநாடு "தமிழ் ஈழப் பிரச்சினையையும் உலகறியச்செய்துவிட்டது. அண்மையில் கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளுக்குச் சென்று மீண்ட முற்போக்கு அணியைச்சேர்ந்த கலைநிதி ஒருவரே "தமிழ் ஈழப்பிரச்சினையை உலகம் அறி[ந்து]ள்ளது" தாம் சென்ற ஒவ்வொரு நாட்டிலும் "தமிழ் ஈழப்பிரச்சினை குறித்தே முக்கியமாக விசாரித்தார்கள்" எனக்கூறியிருப்பது "திருவும்" "திருவைப்போன்றவர்களும்" எடுத்த முயற்சிகளின் பலனே அன்றி வேறல்ல.



"திருவின்" மறைவு தமிழ் ஈழத்தின் எதிர்காலத்துக்கு மாபெரும் நட்டம். அன்ன[ர]து மறைவால் வாடும் அவர[து] துணைவி 'புனிதம்' அவர்க[ளு]க்கும், பிள்ளைகளுக்கும், உ[ற்ற]ார், உறவினர் யாவருக்கும், சிறப்பாகத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

—இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர்இயக்கச்செயலாளர் சட்டத்தரணி வெ. யோகேஸ்வரன் திருச்செல்வம் அவர்களின் மறைவு குறித்து விடுத்த இரங்கற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# எங்கே நீ கொண்டுசென்றாய்?

— சோமலிங்கம் —

கொடுமைபுரிகாலனே திருச்செல்வத்தை
குன்றாத கொள்கையுடை கோமான்தன்னை
கடுகளவும் இரக்கமின்றிக் கவர்ந்துவிட்டாய்
கதியற்ற ஈழத்துத்தமிழருக்கு
முதுகெலும்பாய்த் திண்தோளாய் விளங்கும் செம்மல்
மூதறிஞர் செல்வாவின் மூளையானேன்
எதுவரினும் அஞ்சாத வீரன்தன்னை
ஏன் கவர்ந்தாய் கூற்றுவனே இதுவோ நீதி?

களைகளையே வாழவைக்கும் காலா நீயோ
காராளர் செய்தபயிர் பயனைநல்கும்
பொழுதினிலே அழியவைத்த துரோகி உந்தன்
புன்செயலை எண்ணுகையில் தமிழர்நெஞ்சம்
உலையுதடா உருகுதடா குருதிவெள்ளம்
ஓடையாய்ஓடுதடா உள்ளம்தன்னல்
முளைவிட்ட தமிழ்ஈழம் வளரமுன்பு
முதுபெரிய தலைவனை ஏன் கவர்ந்துசென்றாய்?

சட்டத்தின் நுட்பங்கள் தெரிந்த ஞானி
சரித்திரத்தில் இடம்பெற்ற அழிவிலாத
கட்டத்தை அடைந்துவிட்ட கட்டப்பொம்மன்
கருவூலம் தனில்வார்த்த உருவம்நல்ல
திட்டங்கள் ஆக்குவதில் பெரியவீரன்
செயல்வீரன் தமிழ்ஈழம் காணும்போது
அட்டதிக்கும் போற்றும் ஆள்பதியை எங்கள்
ஆருயிரை எங்கே நீ கொண்டுசென்றாய்?

# 'சுத[ந்]திரத் தமிழ் ஈழமொன்றே 'தி[ரு]'வுக்கு தரக்கூடிய க[ா]ணிக்கை!'

தமிழ் மகளிர் பேரவையின் காங்கேசன்துறைக் கிளைத்தலைவி கலைநிதி தேவா விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:—

சிங்களச் சட்டமன்றத்தில் தமிழர் தம் நீதிக்காகப் போராடிய குரல் ஒய்ந்து விட்டது; இயற்கை அன்னை தமிழ் அன்னையை வஞ்சித்து விட்டாள்! சிங்களச் சட்டமன்றத்தில் ஈழத் தமிழினத்தின் வரலாற்றையே பொன்னெழுத்துக்களால் பொறித்துவிட்டு — தன் பொன் நாவினையே ஒடுக்கிக்கொண்டது அந்தத் தமிழ் மாமலை!

அண்மைக்கால அரசியல் வானில் நம்பிக்கை நிலவாக ஒளிர்விட்டுக் கொண்டிருந்த எம் தலைவன் ஒய்ந்துவிட்டான்! எமையெல்லாம் தவித்திடவிட்டான்! எமக்கெல்லாம் பேரிடியைக் கொடுத்துவிட்டான்! நம் இயக்கப் போராட்டம் தீவிரமடையும் காலங்களிலெல்லாம் — காலத்திற்குக்காலம் ஒவ்வொருவராக — நம்மிடமிருந்து பறித்தெடுத்து வேடிக்கை பார்க்கின்றான் காலன்! நம்மை இப்படியாகத் தத்தளித்திடவைத்து வேடிக்கை பார்ப்பதில் எத்தனை இன்பந்தான் அவனுக்கு!

எமதருந்தலைவா! தனித் தமிழ் நாடே ஈழத்தமிழனுக்கு வீடு—அன்றேல் இது அவனுக்கு சுடுகாடு! என்ற வகையில் இறுதிக் காலத்திற் செயற்பட்டுவந்த உனக்கு —நாம் தரவிருக்கும் காணிக்கையும் தமிழ் ஈழமே! அது வரையும் எம்மால் எதையும் காணிக்கையாக்கிட முடியாது! தமிழ் ஈழத்தைத் தவிர வேறெந்தக் காணிக்கையையும் நம்மிடமிருந்து ஏற்றிடவோ — எதிர்பார்த்திடவோ மாட்டாயே! காண்போம் தமிழ்ஈழம்! அதனைக் காணிக்கை ஆக்கிடுவோம் நின் இதயத்திற்கு!

# புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கம் அனுராதபுரக்கிளை

மேற்படி கிளைச்சங்க தொடக்கக்கூட்டம் 1-11-76 திங்கட்கிழமை மாலை அநுராதபுரம் புகையிரத கலாச்சார மண்டபத்தில் தலைவர் வே. குணரத்தினம் தலைமையில் நடைபெற்றது. மேற்படி சங்கத்தின் பொதுச்செயலாளர் சி. இலிங்கவேலாயுதம் பேசும்போது "நமது இனத்தின் விடிவுக்கு பேசிக்கொண்டு இருப்பதில் பயனில்லை. ஒவ்வொரு தமிழனும் செயற்படவேண்டும். ஒரு கட்டுப்பாடான அமைப்பின்கீழ் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். நாம் அனைவரும் ஓர் இலட்சியத்தின் அடிப்படையில் ஒன்றுபட்டவர்கள். எங்கள் பலம் பெருகுவதுகண்டு மாற்றுச் சங்கத்தினர் திகைக்கவேண்டும். தலைமைப்பீடம் எங்கள் அமைப்பின் செயல்கண்டு சிந்திக்கவேண்டும். கிளைச் சங்க அமைப்புகள் சரியான முறையில் இயங்கினல் நாம் எதிர்பார்க்கும் தமிழினவிடுதலை விரைவில் கிடைக்கும். தமிழினத்தின் விடுதலையிற்தான் தமிழ் தொழிலாளரும் மீட்சிபெற முடியும். எனவே எல்லாத் தமிழ் ஊழியர்களும் ஒரணி திரண்டு போராடி வெற்றி காண்போம்" என்று கூறினர். தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி செயலாளர் நாயகம் ஐ. தி. சம்பந்தன், சிறப்புரை நிகழ்த்தினர்.

கிளைச்சங்க அலுவலர்களாகப் பின்வருவோர் தெரிவாகினர்: தலைவர்: திரு. பொ. செல்லத்துரை. துணைத்தலைவர்கள்: திரு. ஜி. சி. தி. அம்பலவானர், திரு. தி. சிவசிதம்பரம். செயலாளர்: திரு. இ. தி. செல்லையா. துணைச்செயலாளர்: திரு. க:

—6-ம் பக்கம் பார்க்க

# குயுக்தியார் துயரம்!

சட்டமேதை திருச்செல்வம் அவர்களின் எதிர்பாராத திடீர் மறைவால் திருவாளர் குயுக்தியார் ஆழ்ந்த துயரமடைந்துள்ளார். எனவே அவரது பதில்கள் இந்தவாரம் இடம் பெறவில்லையென்பதையும், அடுத்த வாரம் இடம்பெறும் என்பதையும் வாசகர்களுக்கு தெரியத்தருகிறோம்.

— ஆர்

# தமிழ்மாநாடு, புத்தளம், செம்மணி பேராதனை நான்கு படுகொலைகள் பற்றியும் விசாரிக்க பாரபட்சமற்ற ஆணைக்குழு வேண்டும்!

## தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி கோரிக்கை!

**தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியின் அவசரக் கூட்டத்தில் (17-11-76) நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-**

"1976ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் நாள் இலங்கை பல்கலைக் கழகத்தின் பேராதனை வளாகத்தில் ஒரு மாணவர் உயிர் துறக்கவும் பெரும் தொகையான மாணவர்கள் படுகாயமடைந்து உயிருக்கு அஞ்சி அபயம் தேடி ஓடவும் காரணமாக அமைந்த காவல் படையினரின் அட்டகாசத்தை தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி மிகுந்த வன்மையாகக் கண்டிக்கும் அதே வேளையில்—

"காவல் படையினரின் இத்தகைய காட்டாட்சியானது இந்நாட்டு ஜனத்தொகையின் மூன்றில் ஒரு பங்கினரான இலங்கைத் தமிழ் தேசிய இனத்தின் மீது பிரித்தானியர் இந்நாட்டை விட்டுவெளியேறிய 1948ம் ஆண்டு முதல் 1956ம் ஆண்டிலும் 1958ம் ஆண்டிலும் 1961ம் ஆண்டிலும் இன்னும் அநேக சந்தர்ப்பங்களிலும் மிகப் பெருத்தளவில் நடைபெற்றதையும் அதனல் பலர் உயிரிழக்கவும் உடமைகளை இழக்கவும் நேரிட்டதையும் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து சுட்டிக்காட்டும் அதே வேளையில்—

"ஐக்கிய முன்னணி அரசு 1970ம் ஆண்டு மே மாதம் 22ம் நாள் பதவியேற்றது முதல் காவல் படையினரதும இராணுவத்தினரதும் காட்டாட்சி தமிழ்தேசிய இனத்தின் மீது அடிக்கடி கட்டவிழ்த்து விடப்பட்டதையும்; குறிப்பாக,—

(அ) 1974ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 10ம் நாள் யாழ் நகரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது தமிழின் இனிமையைக்கேட்பதற்கு அமைதியுடன் திரண்டிருந்த சுமார் அரை இலட்சம் மக்கள் மீது எவ்வித காரணமுமின்றி பொலிசார் நடத்திய மிருகத்தனமான தாக்குதலினல் ஒன்பதின்மர் உயிரிழந்ததை எதிர்த்து முழுத்தமிழ் தேசிய இனமும் ஒரே குரலில் விசாரணைக் குழு நியமிக்கவேண்டுமெனவிடுத்த கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதையும்,

(ஆ) 1976ம் ஆண்டு ஜனவரித் திங்களில் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு அங்கமான புத்தளம் வாழ் ஆயிரக்கணக்கான முஸ்லீம் மக்கள் மீது காவல் படையினர் கட்டுமீறிய மிருகத் தாக்குதல்களை நடாத்தி பலரின் உயிரைப் பறிக்கவும் பலரைப் படு சித்திரவதை செய்யவும் இவ்வரசு தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருந்ததையும்.

(இ) 1976ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு வழிபாடு நடாத்தச் சென்றுவிட்டு வீடுதிரும்பிய வங்கி ஊழியரான பரராசா என்பவரை செம்மணியில் வைத்து யாழ் காவல் படையினர் பதைபதைக்க சுட்டு கொன்றதையும் அதனை விசாரித்த யாழ் நீதவான் "நியாயம் காட்டமுடியாத படுகொலை' எனத் தீர்ப்பளித்ததையும் அரசு துச்சமென மதித்து இதுவரை கொலைக்குக் காரணமான பொலிஸ் காரன் மீது சட்டத்தின் அடிப்படையிலும் நீதியின் பேரிலும் நடவடிக்கை எடுக்க முன்வராதமையையும்—மிகுந்த வேதனையுடன் அவதானிக்கின்ற அதே வேளையில்;

இன்றைய அரசு பதவிக்கு வந்ததன் பின்னர் நடைபெற்ற அதிமுக்கியமான சம்பவங்களான,

தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுச் சம்பவம், புத்தளம் சம்பவம், செம்மணிச் சம்பவம், பேராதனைச் சம்பவம்,

ஆகிய நான்கினையும் விசாரிக்க பாரபட்சமற்ற விசாரணைக்குழு ஒன்றை உடனடியாக நியமிக்கும்படியும் இச் சம்பவங்களால் உயிர் இழந்தோருக்கும் மற்றும் வகையில் பாதிக்கப்பட்டோருக்கும் ஒரே அடிப்படையில் நட்டஈடு வழங்க வேண்டுமெனவும் [illegible] பிரதம அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திரு'வையும் இழந்தோம்!

**அன்பு நண்பா,**

இந்தக்கிழமை உனக்கு எதை எழுதுவதென்றே தெரியவில்லை; இதயத்தில் துயர வெள்ளம் அலைமோதுகிறது; எதிர்பாராது வந்த பேரிடியால் ஈழத்தமிழினம் திகைத்துத் தடுமாறுகிறது; ஏக்கம் ஏற்படுத்திய தாக்கத்திஞல் வார்த்தைகள் வாராமல் தடுமாறுகிறேன் நான்; சோதனைக்குமேல் சோதனை, வேதனைக்குமேல்வேதனை — நமது விடுதலை இயக்கத்துக்கு; ஈழத்தமிழினத்தின் விடுதலை இயக்கத்தை வலுவுடன் தாங்கி நின்ற மாபெரும் விருட்சங்களிலொன்று திடீரெனச் சாய்ந்துவிட்டது; ஆம், நாம் நம் 'திருவை' இழந்துவிட்டோம்!

நம் திருச்செல்வமா மறைந்தார்? இருக்காது; இருக்கவே இருக்காது; இதை நம்பமுடியவில்லை; நம்பவே முடியவில்லை; என்று அரற்றியபடி; "இது பொய்யாக இருக்கவேண்டும்" என்று மனதுள் பிரார்த்தித்தபடி, "இது உண்மைதாஞ அண்ணு?" என்று தொலைபேசி மூலமாகவும் நேரடியாகவும் நாத்தழுதழுக்க என்னிடம் கேட்ட இதயங்களோ எண்ணிலடங்கா. நானே அதிர்ச்சியிலிருந்தும் அதிர்ச்சி தந்த ஏக்கத்திலிருந்தும் விடுபடாத நிலையில் அந்த ஏங்கும் தமிழ் இதயங்களை எவ்வாறு தேற்றுவதென்று தெரியாமல் தடுமாறினேன் நான்.

ஆம் நண்பா, கலங்காத கண்ணீர் வடிக்காத தமிழர் கண்கள் இல்லை; ஏங்காத தமிழ் இதயங்கள் இல்லை; ஓவென்று அரற்ருத தமிழர் உள்ளங்கள் இல்லை; இனி என்னசெய்யப் போகிருேம் என்று விம்மாத தமிழ் நெஞ்சங்கள் இல்லை; இந்த நெருக்கடி நேரத்தில் இப்படி விளையாடிவிட்டானே என்று காலனைத் திட்டாத தமிழர் வாய்கள் இல்லை; திருச்செல்வம் அவர்கள் அமரரான செய்தி கேட்டு!

நேற்றுத்தானே அவருடன் பேசினேம்; முந்தாநாள் தானே யாழ்ப்பாணத்தில் சந்தித்து விடுதலை இயக்கப் பிரச்சினைகள் குறித்து அவருடன் விவாதித்தோம்; இன்றுகாலையில் தானே வழக்குக் குறித்து உரையாடினேம்; யாருமே இப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லையே; சொல்லாமல் கொள்ளாமல் இப்படி நடுவழியில் தவிக்கவிட்டுப் போய்விட்டாரே; தமிழ் ஈழத்தின் விடுதலை இயக்கம் வலிமை பெற்று, உலகநாடுகளின் ஆதரவுபெற்று வளர்ந்து வருகையில், அந்த வளர்ச்சிக்கும் வலிமைக்கும் அடிப்படைக் காரணமாயமைந்திருந்த ஐயா திருச்செல்வத்தின் ஆருயிரை பலிகொண்டுவிட்டானே இயற்கையெனும் பாவி; என்று இயக்கத்தின் தலைவர்களும், இளைஞர்களும், எல்லோருமே கதறுகிருர்கள்; கண்ணீர் வடிக்கிருர்கள்; திகைத்துப்போய் இருக்கிருர்கள்!

நண்பா, குழந்தை மனமும், குலையாத கொள்கைப்பற்றும், எளிமையும் இரக்கமும் சிறுமை கண்டு பொங்கும் உள்ளமும், மதிநுட்பமும், தீர்க்கதரிசனமும் சட்டத்துறையில் ஈடும் எடுப்புமற்ற மேதாவிலாசமும் தூய்மையான நெஞ்சமும், மூதறிஞர் செல்வா மீது அபார பக்தியும் கொண்டிருந்த எங்கள் திருச்செல்வம் ஐயாவை இனி நாங்கள் காணமுடியாது!

எந்தநேரத்தில் வீடுதேடிப்போனுலும்——யார் போனுலும் இன்முகம் காட்டி வரவேற்று உபசரித்து உதவி புரியும் சீரிய தமிழ்ப் பண்பாட்டின் உறைவிடமாகத் திகழ்ந்த திருச்செல்வத்தை இனி நாம் காணமுடியாது!

ஒன்பது நான்கு சைபர் ஒன்பது ஒன்று —என்ற தொலைபேசி இலக்கங்களைச் சுழற்றிஞல் அந்தப்பக்கத்திலிருந்து அந்த மென்மையான குரல்—"தம்பி, எப்படி, திருச்செல்வம் பேசிறன் தம்பி"—என்று ஒலிக்கும்; தொலைபேசியில் பேசும்போதே ஈழத்தமிழினத்தின் ஈனநிலை கண்டு உணர்ச்சி பொங்க உரையாடுவார் அவர்; தான் ஒரு கியூ.சி., உயர்ந்த அந்தஸ்திலுள்ளவன் என்ற மமதை கிஞ்சிற்றுமின்றி யாருடனும் சரளமாகப் பேசுவார்; [illegible]வார் திருச்செல்வம் ஐயா அவர்கள்; அந்தத் தொலைபேசி இலக்கங்களை சுழற்றிஞல் இனிய பாசமிக்க அந்தக் குரலை இனிமேல் கேட்கமுடியாது!

**21-11-76** பிற்பகல் இரண்டுமணியிருக்கும்; திருச்செல்வம் ஐயா வீட்டுக்கு 'போன்' செய்கிறேன்; துரையப்பா கொலை வழக்கில் உயர்நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்வதற்கு 'றிட்'மனு தயாரிப்பதில் அப்போது அவர் ஈடுபட்டிருந்தார்; "தம்பி, கொஞ்சம் காய்ச்சலாக இருக்கிறன் தம்பி" என்ருர்; உங்களுக்கு நான் கஷ்டம்தர விரும்பவில்லை, நாளை பேசுகிறேன் என்று கூறிவிட்டு தொலைபேசி றிசிவரை வைக்கிறேன்; ஐயகோ, ஐயகோ, அதேநாள் நள்ளிரவு திடீரென திருச்செல்வம் ஐயாவை இழப்போமென யார்தான் எதிர்பார்த்தோம்? அவர் காய்ச்சல் என்று கூறியதும், உடனடியாகச் சென்று அவரைப் பார்க்காமலிருந்து விட்டோமேயென்பதை இப்போது எண்ணும்போது துக்கம் தொண்டையை அடைக்கிறது!

நண்பா, திருச்செல்வம் அவர்கள் முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல்; ஈழத்தின் குறிப்பிடத்தகுந்த சட்டமேதைகளில் ஒருவர்; இராணி அப்புக்காத்து; முன்னாள் மூதவை உறுப்பினர்; முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர்; இத்தகைய இன்னும் பல பெருமைகளை அவர் பெற்றிருந்தாலும், இவையெல்லாவற்றையும்விட, சுதந்திரத் தமிழ் ஈழத்துக்காகப் போராடும் விடுதலை இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவர் என்ற பெருமையே நிலைத்து நின்று அவருக்குச் சிறப்பைத்தருகிறது; வரலாற்றில் அழியா இடத்தைத்தருகிறது!

ஆம் நண்பா, சிங்களத் தலைவர்களிடம் மிகவும் நெருக்கமாகப்பழகி, இரண்டு சிங்கள அரசுகளுடன் உடன்படிக்கைகள் செய்வதற்கு மறைமுகமாகவும், நேரடியாகவும் காரணியாக இருந்து, சிங்கள அரசுகளால் ஏமாற்றப்பட்டு, சிங்களவர்களின் உளப்பாங்கை தெளிவாக உணர்ந்து—தனித்தமிழ் ஈழநாட்டை அமைப்பது தவிர தமிழ்தேசிய இனத்துக்கு இனி

## அரசியல் மடல்

வேறு வழியேயில்லையென்ற மாற்றமுடியாத தீர்மானத்துக்கு திருச்செல்வம் அவர்கள் வந்திருந்ததுடன் தம்மைச் சந்திக்கும் எவருக்கும் இதையே துலக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துரைத்துவந்திருக்கிருர்!

உலகின் பிரசித்தியும், செல்வாக்கும் பெற்ற வெளிநாடுகளின் பத்திரிகை நிருபர்கள், கொழும்புக்கு வரும்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'தனிநாடு' கோரிக்கை பற்றி அறிவதற்கு திருச்செல்வம் அவர்களையே பேட்டி காண்பார்கள்: அப்போதெல்லாம் அவர்களது கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் 'பட்பட்'டென்று பதிலளித்து, தனிநாடு கோரிக்கையிலுள்ள சர்வதேச சட்டபூர்வமான நியாயத்தையும், வரலாற்று ஆதாரங்களையும் சரளமாக அள்ளிவீசி அந்த வெளிநாட்டு நிருபர்களை நம் கோரிக்கையின்பால் ஈர்த்தெடுக்கும் திருச்செல்வம் ஐயாவின் கூர்ந்த மதிநுட்பம்கண்டு எத்தனையோ தடவைகளில் பிரமித்திருக்கிறேன்!

தனிநாடு கோரிக்கையை சலுகைபெறும் நோக்கத்துடன் அல்லது பேரம்பேசும் நோக்கத்துடஞ முன்வைத்திருக்கிறீர்கள் என்று நிருபர்கள் கேட்பார்கள்; அப்போதெல்லாம் ஆக்ரோஷத்துடன், இல்லை — நாம் எந்தச் சலுகையையும் நாடவில்லை; இது பேரம்பேசக்கூடிய விஷயமுமல்ல; சமஷ்டிக்கோரிக்கையையே நாம் கைவிட்டு விட்டோம்; தனித்தமிழ் நாடு நம் முடிந்த முடிபு; இதை ஒரு போதுமே விட்டுக்கொடுக்க மாட்டோம்; இதைவிட்டுக்கொடுத்தால் நம் இனமே அழிந்துவிடும்;" என்பார் திருச்செல்வம்!

இந்த அளவுக்கு அவர் தமிழ் ஈழ இலட்சியத்தின் மீது ஆழமான பற்றும், தமிழினத்தின் விடுதலை மீது துடிப்பும் காட்டி வந்திருக்கிருர்! தந்தை செல்வாவையே தம் ஒரே தலைவராக ஏற்று தமிழர் விடுதலைக்கூட்டணியில் அவர் செயல்பட்டாலும் — அஹிம்சைக்கொள்கையைத் தனிப்பட்டமுறையில் அங்கீகரிக்க மறுத்துவந்தவர் திருச்செல்வம் அவர்கள்; "தமிழ் ஈழத்தின் விடுதலையை யுத்தம் நடத்தித்தான் நாம்வென்றெடுக்கவேண்டும்; மிருக வெறிபிடித்த சிங்களவர்களுடன் சத்தியாக்கிரகம் ஒருபோதுமே சரிப்பட்டு வராது தம்பி" என்று என்னிடம் பலதடவை அவர் கூறியிருக்கிருர்!

**அண்ணன் அமிர்தலிங்கம் மீதான ட்ரயல் — அற் — பார் வழக்கின்போது மறைந்து கிடந்த—மறைக்கப்பட்டுக் கிடந்த —தமிழ் ஈழநாட்டின் வரலாற்றை மன்றத்தில் எடுத்து முழங்கி — தமிழ் ஈழத்தின் இன்றைய சுதந்திர முழக்கத்தை—ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை என்ற இலட்சிய முழக்கத்தை நீதிமன்றத்தில் எழுப்பி — 1619ல் இழந்த அரசுரிமையை தமிழினம் பெறுவதற்கு அதற்கு சர்வதேச சட்டப்படி உரிமையிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி— திருச்செல்வம் அவர்கள் ஆற்றிய வீர உரை —வரலாற்றில் அழியாத வைர வரிகளாகும்! தமிழ்ஈழத்தின் சுதந்திரப்போரை முன்னெடுத்துச்செல்லும் எதிர்காலத் தமிழ் இளைஞர்களுக்கு அசைக்க முடியாத ஓர் பற்றுக்கோடாக்கும்! விடுதலை விரும்பிகளுக்கு அஃது ஓர் புதிய புறநானூருகும்.**

திருச்செல்வம் அவர்கள் தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக எவ்வளவோ செய்யத்திட்டமிட்டிருந்தார்; தமிழர் விடுதலைக்கூட்டணியை தமிழர் விடுதலைஇயக்கமாகமாற்றி அனைத்துலகத்தமிழர்க்கும்பொதுவான இயக்கமாகஅதை ஆக்கஆவல்கொண்டிருந்தார்; அவரிடமிருந்து தமிழினமும் எவ்வளவோ எதிர்பார்த்திருந்தது! ஆஞல் அந்தோ—இயற்கையெனும் பாவிக்கு பொறுக்கவில்லை! எம் திருவை அழைத்துக் கொண்டுவிட்டான்!

வன்னியசிங்கம், இராசவரோதயம், வீ. ஏ. கந்தையா, மூதூர் ஏகாம்பரம், டாக்டர் நாகநாதன், வீ. ஏ. அழகக்கோன், சி. மூ. இராசமாணிக்கம், பொ. மாணிக்கவாசகர் இந்தவரிசையில் இப்போதுநம்முடைய திருச்செல்வம்... அப்பப்பா எத்தனை அருந்தலைவர்களை பறிகொடுத்துவிட்டோம் இந்த இயக்கத்தில்? எத்தனை பெரிய சோதனைகளின் மத்தியில் இந்த இயக்கம் முன்னேறுகிறது?

**துன்பங்களும் சோதனைகளும ஒரு விடுதலை இயக்கம் சந்தித்தே தீரவேண்டியவை; எனவே கண்ணீரைத் துடைத்துக் கொள்வோம்; கடமையில் நம் மனதைச் செலுத்துவோம்! தங்கத் தமிழீழத்தின் விடுதலைக்கு நம்மை நாம் அர்ப்பணிப்போம்! இதையே அமரர் திருச்செல்வம் அவர்கள் தமக்கேயுரிய அந்தப் புன்னகையுடன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிருர்!!**

"சிங்கள மக்கள் சமஷ்டியாட்சிக்கு சம்மதிக்கமாட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. இந்நிலையில் தமிழர்களாகிய நாம் எமது பாரம்பரிய தமிழ் ஈழநாட்டை மீண்டும் அமைத்து, சிங்களவர்களிடமிருந்து பிரிந்து போவது என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்! சமஷ்டிக் கோரிக்கையை கைவிட்டுவிட்டோம்; தனிநாடு அமைப்பது, அல்லது தனிநாட்டுக்காகப் போராடி அதிலேயே அழிந்தொழிவது என்ற இறுதி முடிவுக்கு வந்து இதை உலகநாடுகளுக்கும் அறிவித்துவிட்டோம். உலகமக்கள் எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்வார்கள்!"

திருச்செல்வம் அவர்கள் மறைவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் (18-11-76) தேசிய அரசுப் பேரவையில் நம்முடைய தந்தை செல்வா அவர்கள் மேற்கண்டவாறு வெட்டொன்று துண்டுஇரண்டாகக் கூறியிருக்கிருர்கள்! எனவே தந்தை செல்வாவின் தலைமையில் தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு உறுதியுடன் போராடுவதே எங்கள் 'திரு'வுக்கு நாம் செய்யும் கைம்மாருகும்.

அமரர் திருச்செல்வம் அவர்களின் திருநாமம் என்றும் தமிழர்களின் இதயத்தில் நிலைத்து நிற்கும்!

**உன் அன்புத் தோழன்.**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## அமரர் கண்ட கனவை நனவாக்குவோம்!

தமிழ்ஈழ சுதந்திர இயக்கத்தை வலுவுடன் தாங்கி நின்ற பாரிய தூண்களிலொன்று திடீரெனப் பாறி விழுந்துவிட்டது!

யாரும் எதிர்பாராத நேரத்தில் தாங்கமுடியாத வேதனையைத் தந்து விட்டு தமிழினத்தை வேடிக்கை பார்க்கிறது இயற்கை!

சிந்தனை, சொல், செயல் மூன்றினாலும் தமிழினத்தின் மீட்சிக்காக அயராது உழைத்துவந்த திருச்செல்வம் அவர்கள் சொல்லாமற் கொள்ளாமல் மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்டார்!

தமிழினத்தின் உயர்வுக்காக உழைத்துவந்த எட்டு நல்முத்துக்களை கடந்த 15 ஆண்டுகாலத்தில் ஒவ்வொருவராகப் பறித்துக்கொண்ட காலன், அந்த வரிசையிலே ஒன்பதாவதாக திருச்செல்வம் அவர்களின் உயிரை திடீரென எடுத்துக்கொண்டு விட்டான்!

அதிக மகிழ்ச்சியை அடுத்து அதிகமான துக்கம் ஒன்று ஏற்படும் என்று ஆன்றோர் கூறுவார்கள்!

அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிரான வழக்கில், அவசரகாலச்சட்டம் செல்லுபடியாகாதென வழங்கப்பட்ட தீர்ப்புக்கண்டு—இந்த வழக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய ஒற்றுமைகண்டு—இந்த வழக்கின்போது நமது திருச்செல்வம் ஐயா அவர்கள் தமிழ்ஈழத் திருநாட்டின் வரலாற்றையும் அதற்குள்ள அரசுரிமையையும் உலகறிய எடுத்துக் கூறி, தமிழீழப் போராட்டத்தின்பால் உலக நாடுகளின் கவனத்தைத் திருப்பியதைக்கண்டு — ஒவ்வொரு தமிழனுமே உள்ளம் துள்ளினான்; மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தினான்! தமிழ்த்தலைவர்களின் சட்டத்திறனையும் மதிநுட்பத்தையும் கண்டு உலகமே வியந்தது!

இத்தகைய மகிழ்ச்சி வெள்ளத்தில்—வெற்றிக் களிப்பில் — மூழ்கிக்கிடந்த தமிழினம், இப்போது தாங்கமுடியாத வேதனையில் மூழ்கித்தவிக்கிறது.

எந்தப்பிரச்சினையிலும் ஓடோடிச்சென்று சட்ட ஆலோசனை பெற நம்பிக்கையான ஒருவராக திருச்செல்வம் ஐயா இருந்தார்; இனி யாரிடம் செல்வோமென இயக்கத்தினர் ஏங்குகிறார்கள்!!

அமரர் திருச்செல்வத்தின் பூதவுடல் எரி மூட்டப்பட்டுவிட்டது; அவரது அஸ்தி தமிழீழத்து புனித ஆறுகளில் கரைக்கப்படுகிறது!

இனி கவலைப்பட்டும், கண்ணீர் சிந்தியும் ஆவதொன்றில்லை! வேதனையினால் விளைவதொன்றில்லை! சாதனையில் நம் கவனத்தை செலுத்துவோம்!

**திருச்செல்வம் அவர்கள் தமது கடைசிக்காலத்தில் இரண்டு விஷயங்களில் மிகவும் உறுதியாக இருந்தார். ஒன்று, ஒப்பந்தங்களிலும், உடன்படிக்கைகளிலும், நன்கு அனுபவப்பட்டு, சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டு, சூடு கண்ட பூனையாக விளங்கிய அவர்—சிங்களத் தலைவர்களின் நம்பிக்கைத் துரோகத்தை அனுபவ ரீதியாக உணர்ந்துகொண்ட அவர்—சிங்களவர்களுடன் சமரசம் பேசுவதையோ, உடன்படிக்கை செய்வதையோ கிஞ்சிற்றும் ஏற்றுக்கொள்ளாதவராக இருந்தார்; சிங்களவர்களால் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட தமிழ் மக்கள் தயாராக இல்லையென்று எடுத்துக் கூறிவந்தார்.**

இரண்டாவதாக – 1619ம் ஆண்டு தமிழினம் இழந்த அரசுரிமையை — அதாவது சுதந்திரத் தமிழ்ஈழநாட்டை மீள அமைப்பதற்கு அதற்கு சட்ட ரீதியாக உரிமையும், இறைமையும் உண்டு; அதைத் தமிழ்த்தேசிய இனம் பிரயோகித்து தமிழ் ஈழத்தை மீட்டுக்கொள்வதொன்றே தமிழர்களின் ஒரே இலட்சியமாக இருந்திடவேண்டும்; அதற்காக தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்; அடுத்த பொதுத்தேர்தலின் பின்னர் தமிழ் ஈழத்தின் அரசியல் நிர்ணய சபையொன்று உருவாக்கப்பட்டு, தமிழ்ஈழத்தின் அரசியல் சட்டம் உருவாக்கப்படவேண்டும்; என்பதே அமரர் திருச்செல்வத்தின் இறுதிக்கால இலட்சியமாக விளங்கியது!

இந்த இலட்சியத்தை நோக்கி விசுவாசத்துடன் உழைப்பதே அமரருக்கு நாம் செலுத்தக் கூடிய அஞ்சலியாகும்.

# உலகத் தமிழர்களுக்கு பேரிழப்பு

## அமரர் திருச்செல்வத்துக்கு தமிழ்நாட்டுத் தலைவர்கள் அஞ்சலி!

மறைந்த தலைவர் மு. திருச்செல்வத்துக்கு தமிழ் நாட்டின் அரசியற் தலைவர்கள் பலர் தமது இறுதி அஞ்சலியை செலுத்தும் இரங்கற் செய்திகளை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அனுப்பிவைத்துள்ளனர். தி. மு. க. தலைவரும் முன்னாள் முதல்வருமான கலைஞர் மு. கருணாநிதி, அனைத்திந்திய அ; தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், தி. மு. க. பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் திருச்செல்வத்தின் மறைவு குறித்து தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

"கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன், கண்ணகிக்கு சேரன் செங்குட்டுவன் எடுத்த விழாவில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்டான். அதுபோல 1968ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தமிழுக்கு எடுத்த விழாவிலே இலங்கையின் சார்பில் கலந்துகொண்ட திருச்செல்வம் அவர்கள் மறைந்துவிட்டார். அவரது மறைவு உலகெங்கிலும் பரந்துவாழும் தமிழர்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்."

—இவ்வாறு கலைஞர் கருணாநிதி தமது இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கலைஞர் கருணாநிதி சார்பாக அவரது வழக்கில் ஆஜராவதற்கு திரு. திருச்செல்வம் அவர்கள் அடுத்தமாதம் சென்னை செல்லவிருந்தது குறிப்பிடத்தக்கது.

## அழுத கண்ணீ...

—1-ம் பக்கத் தொடர்

அத்[illegible]யாவசிய ஊழியர் சங்கம், [illegible]ருணாநிதி பொதுப்பணி மன்றம், மெய்கண்டான் நிறுவனம், கொழும்பு செட்டியார்தெரு வர்த்தகர்கள், மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கம் ஆகியன உட்பட பல பொதுமன்றங்கள் அமரரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தன.

### இறுதி அஞ்சலி!

புதன் கிழமை காலையிலிருந்தே ஹெஸ்மீட் பிளேசிலுள்ள அமரரின் இல்லத்தை நோக்கி இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பொது மக்களும், தலைவர்களும், சட்டத்தரணிகளும், அரசியல்வாதிகளும் நீதிபதிகளும் வந்த வண்ணம் இருந்தனர். தமிழ் ஈழத்தின் அனைத்துத் தொகுதிகளிலிருந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய உறுப்பினர்களும் தீவிர ஆதரவாளர்களும் அமரருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக அவரது இல்லத்தை முற்றுகையிட்டிருக்கக் காணப்பட்டனர். கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழர் விடுதலைக்கூட்டணியின் முக்கியஸ்தர்கள் ஏராளமாக வந்திருந்தது, கிழக்கு மாகாண மக்கள் அமரர் மீது கொண்டிருந்த பாசத்துக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது.

### சிங்கள நாடும் தமிழ் ஈழமும் இறுதி மரியாதை

சிங்கள நாட்டின் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா அவர்களும், சிங்கள நாட்டு அமைச்சர்கள் பலரும், மற்றும் சிங்கள நாட்டு அரசியற் கட்சிகளின் முக்கிய தலைவர்களான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, டாக்டர் தகநாயகா, டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா போன்றோரும் அமரர் திருச்செல்வத்துக்கு இறுதி அஞ்சலிசெலுத்தினர்.

தமிழ் ஈழத்தின் தலைவர்களான மூதறிஞர் தந்தை செல்வா, அமிர்தலிங்கம் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வ.ந. நவரத்தினம் பண்டிதர் கா. பொ. இரத்தினம், வி. தர்மலிங்கம், வி. ஆனந்தசங்கரி, மு. சிவசிதம்பரம், மு. ஆலாலசுந்தரம், சே. மா. செல்லத்தம்பு, செ. இராசதுரை, க. ஜெயக்கொடி பா. நேமிநாதன், அ. தங்கத்துரை, மு. மாணிக்கம், க. துரைரத்தினம், டாக்டர் உதுமா லெப்பை ஆகியோருட்பட கூட்டணியின் முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள் அனைவரும் கண்ணீர் மல்க மறைந்த தலைவருக்கு இறுதி மரியாதைசெய்தனர்.

—5-ம் பக்கம் பார்க்க

## நின் நாமம் வரலாறாகும்!

மானமே பெரிதென்றெண்ணும்
தமிழினம் மாற்றார் ஆட்சி
ஈனமே அடைவதாமோ
இங்கு ஓர் தமிழன் தானும்
தான் ஒரு அடிமையாக
வாழ்வதைக் சகிக்கப் போமா!
வானமே சாட்சியாக
வையத்துத் தமிழர் சாதி
தானும் பேராட்சி காண
திருச்செல்வம் தடயந் தந்தான்.

போர்க்களம் காணச் சித்தம்
பொங்கவும் செய்துவிட்டான்
மார்க்கங்கள் பலவாய் எங்கள்
மண்ணை நாம் ஆள்வதற்கு
தீர்க்கமாய் திருச்செல்வந்தான்
தேடியே எழுதித்தந்தான்
ஓர்குல மாக நாமும்
ஒன்றுதான் கொள்கை என்றே
பாருக்குள் தமிழ்த்தாய் ஈழத்
தனியரசாள்வோம் என்றான்.

அந்தகோ! இந்தக் காலை
அறிஞனை நீதி வாழ்வைத்
தந்த திருச் செல்வமென்ற
தமிழினத் தலைவன் தன்னை
இந்த ஓர் பொழுதில் கொண்ட
இயற்கையின் சித்தம் யாதோ!
எந்தமிழ் அரசும் ஈழத்
தாயக மண்ணில் பூக்கும்
அந்த நாள் "திரு" நின் நாமம்
சரித்திர வரலாறாகும்.

—கவிஞர் சக்தி பாலையா

## நாவல் நகரிலும் துக்கம் அனுட்டிப்பு

பெரியார் திருச்செல்வம் அவர்களின் மறைவு குறித்து நகரில் உள்ள தமிழ், முஸ்லிம் வர்த்தக ஸ்தாபனங்களில் வெள்ளை கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்கதினம் அனுட்டிக்கப்பட்டது.

## அமரர் நினைவாக மாங்கன்று!

திருச்செல்வம் அவர்களின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற அன்று யாழ் மாநகர சுகாதார அலுவலகம் முன்பாக மாநகரசபை ஊழியர் ஒருவர் மாங்கன்று ஒன்றை நட்டார். இதற்காக மேற்படி சுகாதார அலுவலக அதிகாரி ஜெகநாதன் என்பவர் அந்த ஊழியரைக் கடுமையாகக் கண்டித்தாராம்.

## சுன்னாகம் பட்டினசபை அனுதாபம்

"திரு. மு. திருச்செல்வம் கியூ. சி., அவர்களின் திடீர் மரணம், இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது, ஏனைய இனத்தவர்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். இவர் சட்ட நுணுக்கங்களை எடுத்துக்காட்டி நீதி பரிபாலனத் துறையில் வெற்றிக்கொடியைப் பறக்கவிட்ட ஒரு பேரறிஞராகவும் திகழ்ந்தார். அத்துடன் தமிழ் மக்களின் விடுதலைக்காக வீறுநடை போட்ட முற்போக்குவாதியும் கூட. அதுமட்டுமல்லாது, இந்நாட்டு அரசியலில் முக்கிய பங்குகொண்ட அவர், சிங்கள மக்கள், சிங்கள அரசியல்வாதிகள் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவரும் கூட. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தாருக்கும் எமது பட்டினசபையின் சார்பில், ஆழ்ந்த அனுதாப[illegible] தெரிவித்துக்கொள்கிறோம்."

இவ்வாறு திரு. இ. இராசதுரை, அவர்கள் பிரேரிக்க, திரு. ஆ. நடராசா, உபதலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகனுர் பணி தொடர்வோம்

—"அக்கரை மாணிக்கம்"—



பழகுதற்கினிய நண்பன்
பார்வைக்கு வெள்ளையன்போல்
அழகிய தோற்றங் கொண்ட
அருந்தமிழ்த் தலைவன் "பாலாவி"
வழங்கிய முத்து, மன்னர்
வாழ்கின்ற மக்கள் சொத்து
அழகக்கோன் அமரரானர்
அவன் பணி தொடர்வோம் நாமே.

சில தமிழ்த்தலைவர் போல
சில்லறைச் சலுகைக் கெல்லாம்
தலையாட்டி வாழ்ந்திடாத
தன்மானத் தமிழன், தன்னை
விலைபேச வந்த பேர்கள்
வெட்கியே திரும்ப சூழ்ச்சி
வலைகளை அறுத் தெறிந்து
வரலாறு படைத்த ஐயன்.

எல்லோர்க்கும் இனியன், இந்த
இலங்கை வாழ் தமிழர் என்றும்
நல்வாழ்வு காண நாளும்
நற்சேவை புரிந்த செம்மல்
சொல்லாலும் செய்கையாலும்
துணிவுடைத் தமிழனுக
பல்லோரும் போற்ற வாழ்ந்து
பரிசுத்த ஆவியானுன்.

வந்தனைக்குரிய மேலோன்
வஞ்சனை அறியான், நல்ல
சிந்தனையாளன் யார்க்கும்
தீமைகளை செய்தறியான் உயர்
"மந்திரி"ப் பதவி பெற்று
மாண்புற வாழ எண்ணி
செந்தமிழ் இனத்தை விற்க
சிறிதேனும் நினைத்தான் இல்லை.

இலங்கை வாழ் தமிழர்க்காக
இருபது ஆண்டுக்காலம்
கலங்காமல் துன்பம் ஏற்று
கண்ணியம் பெரிதாய்ப் போற்றி
பலங்குன்றி நின்றபோதும்
பகையினைச் சாடி எங்கள்
கலங்கரை விளக்கமானுன்
கடமையின் வடிவம் வாழ்க.

(25-11-76 அமரர் அழகக்கோனின் 3வது நினைவு தினமாகும்.)

## தனியரசு தந்தருள்வாய்

—அமரர் அழகக்கோன்

பாடப்பாவுண்டு படிக்க நல் நாவுண்டு
கலை கலாச்சாரமுண்டு — மொழியற்று
பாட வைகையேன்; சிறை கிடந்தாலும்
மலைபெயர்த்தெறியும் வலியுடைத்த
மறத்தமிழா! வீரமுடன் விரைந்தெழுவாய்
மகிமையுடன் நம்நாடு சிறக்கவேண்டும்
[illegible]ம்பொங்கி உலகெல்லாம் உய்யவேண்டும்
ப[illegible]கமையில்லாப் பண்புடனென்றும் வாழவேண்டும்
தீந்தமிழ் காவியங்கள் படிப்பதுடன் இயற்றவும் வேண்டும்
பாந்தமுடன் தமிழோசை தரணியெல்லாம் ஒலிக்க வேண்டும்
இனிமையுடன் தமிழ் மக்கள் இசைந்து வாழ
தனியரசு தயவோடு தந்தருள்வாய் தற்பரனே

—(1961ல் தடுப்புக்காவலில் இருந்தபோது எழுதியது)

# தமிழீழத்துக்கு அமரரின் அஸ்தி!

## சனியன்று கீரிமலையில் கரைக்கப்படும்!

## வீரசிங்கம் மண்டபத்தில் இரங்கற் கூட்டம்!

தமிழ்ஈழ சுதந்திர இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான அமரர் திரு. மு. திருச்செல்வம் அவர்களின் அஸ்தி தமிழ்ஈழத்தில் முக்கிய நகரங்களுக்கு எடுத்துச் செல்லப்பட விருக்கிறது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று இடங்களுக்கும் இந்த அஸ்தி எடுத்துச் செல்லப்பட்டு பொதுமக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டபின்னர் புனித ஆற்றில் கரைக்கப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை தமிழர் விடுதலைக்கூட்டணி செய்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் சனிக்கிழமையன்று (27-11-76) விமானமூலம் எடுத்துச்செல்வார். பலாலியிலிருந்து அமரரின் அஸ்தி கீரிமலைக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு கரைக்கப்படும். அன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் அமரருக்கு அனுதாபக் கூட்டம் ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்துகிறது. இந்த அஸ்தி கரைப்பு வைபவத்திலும் கூட்டத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்கள் அனைவரும் பங்குபற்றுவார்கள். இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமானும் பங்குபற்றி இரங்கற் கூட்டத்துக்கும் தலைமை தாங்குகிருர்.

மட்டக்களப்புக்கு, மட்டக்களப்பு முதல்வர் செ. இராசதுரையும் திருகோணமலைக்கு, திருகோணமலை பா. உ. திரு. பா. நேமிநாதனும் அமரரின் அஸ்தியை எடுத்துச்செல்வார்கள்.

## மறைந்த பழைய கைதிக்கு தற்போதைய கைதிகள் அஞ்சலி!

1961ம் ஆண்டு [illegible]மிழின உரிமைப் போராட்டத்திலீடுபட்டு தடு[illegible]புக்காவல் கைதியாக இருந்த அமரர் திருச்செல்வத்துக்கு தமிழீழ சுதந்திரப் போரில் ஈடுபட்டு தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த 24-11-76 புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு அனுதாபக்கூட்டம் ஒன்றை நடத்தி அமரரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்தனர்.

## அழுத கண்ணீ..

—4-ம் பக்கத் தொடர்

தமிழ் இளைஞர்பேரவை தமிழ்மகளிர்பேரவை;இலங்கைத்தொழிலாளர் கழகம் புத்தளம் தமிழ்பேசும் இளைஞர் மன்றம், மொழிவழித் தொழிற் சங்கங்கள், தமிழ்தொழிற் சங்கக்கூட்டணி, இஸ்லாமிய இணைப்புபேரவைஈழத்தமிழ் எழுத்தாளர்பேரவை சுடர் கலை இலக்கிய மன்றம்,ஆகிய பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இறுதி அஞ்சலியிலும், இறுதியாத்திரையிலும் பங்குபற்றினர்கள்.

பல கிறிஸ்தவ குருமார்களும் அமரருக்கு தமது இறுதி அஞ்சலியை தெரிவித்ததுடன் இறுதியாத்திரையிலும் பங்கேற்றனர்.

### தொண்டமான் அஞ்சலி!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. சௌ. தொண்டமான், பொதுச்செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி ஆகியோருட்பட இ. தொ. கா. தலைவர்கள் பலரும் இறுதி யாத்திரையில் பங்கேற்றனர்.

இல்லத்தில் இறுதிக் கிரிகைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து, சரியாக பிற்பகல் 4.30 மணிக்கு அனைவரும் ஓவெனக் கதறியழ அமரரின் பூதவுடலைத் தாங்கிய பெட்டியை நாவலர் அமிர்தலிங்கம் அவர்களும், ஏனைய கூட்டணித்தலைவர்களும் தோள்கொடுத்துச் சுமந்து சென்று மலரால் அலங்கரிக்கப்பட்டிருந்த மோட்டார் ரதத்தில் வைத்தபோது அனைவர் கண்களும் கலங்கின.

### இறுதி ஊர்வலம்

முன்னே மலர்வளையங்களைத் தாங்கியபடி மக்கள் செல்ல — அடுத்து தமிழ் ஈழத்தின் தேசியக் கொடியான உதயசூரியன் கொடியை தாழ்த்திப் பிடித்தபடி தமிழ் இளைஞர்கள் அணிவகுத்துவர— தொடர்ந்து முதியவர் முன்ஞள் மூதவை உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் மிகப் பெரிய உதயசூரியன் கொடியைத் தாங்கிவர — இருபுறமும் அணிஅணியாக மக்கள் வெள்ளம் வர — அமரரின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த மோட்டார் ரதத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களும் தொண்டர்களும் இழுத்துவர இறுதி ஊர்வலம் புறப்பட்டது.

### சட்டத்தரணிகள் இழுத்தனர்!

சுமார் இரு மைல் தூரம் நடைபெற்ற இந்த இறுதி ஊர்வலத்தின் கடைசிக்கட்டத்தில் — மறைந்த மாபெரும் சட்ட மேதைக்கு இறுதி மரியாதை செலுத்துமுகமாக சட்டத்தரணிகள் அனைவருமாகச் சேர்ந்து மோட்டார் ரதத்தை இழுத்துச் சென்றனர். இதில் சட்ட மாஅதிபர் திரு. சிவா பசுபதியும் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

இறுதி ஊர்வலம் கனத்தையிலுள்ள் இந்துமயானத்தை சென்றடைந்தபோது அங்கு சுமார் ஐம்பதிஞயிரம் மக்கள் திரண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இறுதி ஊர்வலத்தில் இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாக தமிழ்த்துறைத் தலைவர் பேராசியயர் டாக்டர் சு. வித்தியானந்தன், வரலாற்றுத்துறை விரிவுரையாளர் டாக்டர் பத்மநாதன் ஆகியோரும் பங்குபற்றினர்.

### சிறிலங்கா ஜனதிபதி அஞ்சலி!

நாவலர் அமிர்தலிங்கமும் ஏனைய தலைவர்களும் அமரரின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த பெட்டியை ரதத்திலிருந்து இறக்கி தமது தோள்களில் சுமந்தபடி கொண்டுசென்று சிதையில் வைத்தனர். எங்கும் ஒரே சோக வெள்ளம்; அனைவரது கண்களிலும் கண்ணீர்.

மயானத்தில் வைத்து சிறிலங்கா ஜனதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ அமரருக்கு தமது இறுதி அஞ்சலியை செலுத்திஞர். தலைவர்கள் கண்ணீர்மல்க தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர். அமரரின் இரு மகன்களும் சரியாக மாலை 6.00 மணிக்கு சிதைக்கு தீமூட்டினர்.

**வாய்மை தவருது தூய்மையாளராகவே வாழ்ந்து மடிந்த அந்தத் தூய திருமேனியை அக்கினி தேவன் தன்னுள் சங்கமாக்கிக் கொண்டான்; தமிழ் ஈழத்தின் சுதந்திர இயக்க வரலாற்றில் ஒரு அத்தியாயம் முடிந்து விட்டது!**

### புகைவண்டிப் பகுதி...

—2-ம் பக்கத் தொடர்

அன்னலிங்கம். பொருளாளர்: திரு. வே. குமாரசுந்தரம். செயற்குழு உறுப்பினர்கள்: பொ. தியாகராசா, பொ. சுந்தரேஸ்வரன், எஸ். செல்வநாயகம், பொ. தர்மலிங்கம், எஸ். இ. இராசநாயகம்.

நுளம்புத் தொல்லை நீங்க
நீம் சுகாதார தூபம்
பாவியுங்கள்.
ஒரு பைக்கற் — 25—சதம் மட்டுமே
ஒரு மில்க்வைற் உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதானா உங்கள் சோசலிசம்!

## அரசுப்பேரவையில் பண்டிதர் கேள்விக்குமேல் கேள்வி!

**அரசாங்கம் சோசலிசப் பாதையிலே செல்கின்றதென்று நிதி அமைச்சர் கூறுகின்றார். நேற்று சபையிலே பேசிய வெளிநாட்டு, உள் நாட்டு வர்த்தக அமைச்சரும் மக்களுடைய ஆதரவோடு இந்த அரசாங் கம் சோசலிச பாதையிலே செல்கின்றது என்று கூறினார். எங்களைப் பொறுத்த அளவிலே, நாங்கள் இன்று அடக்கியாளப்படுகின்ற ஓர் அடிமை இனமாக இருக்கிறோம். ஆண்ட ஓர் இனத்தை வாக்குப் பலத் தாலும் ஆள் பலத்தாலும் அடக்கியாளுவதுதான் சோசலிசப் பாதையா என்று நான் கேட்க விரும்புகிறேன்!**

நாங்கள் விடுதலை பெற்றவர்களாக சிங்கள மக்களைப் போல சம உரிமைகளோடு வாழவேண்டும் என்று முனைந்து நிற்கின்றோம். இதற்காக முனைந்து நிற்கின்ற தமிழ் இளைஞர்களையெல்லாம் நாலாம் மாடிக்குக் கொண்டுபோய் சித்திரவதை செய்வதும் அவர்களை அடக்கியொடுக்குவதும் தான் உங்கள் சோசலிசப் பாதையா என்று நான் கேட்கவிரும்புகிறேன்! பல தமிழ் இளைஞர்களை எக்காரணமும் காட்டாமல் கைது செய்து கொண்டுபோய் ஆண்டுக் கணக்காகச் சிறையில் அடைத்து வைத்து அவர்களை வதைசெய்வது தான் உங்களுடைய சோசலிச வழியா என்று கேட்க விரும்புகிறேன்!

பலமதத்தவர்களும் வாழுகின்ற இந்நாட்டிலே பௌத்த சமயத்தை மட்டும் அரச மதமாக்கி ஏனைய மதங்களின் பெயர்களைக் கூட அரசியலமைப்புச் சட்டத்திலே குறிப்பிட முடியாதென்று சொல்லுகின்ற இந்த அரசாங்கமா சோசலிச பாதையிலே செல்லுகின்றதென்று நான் கேட்க விரும்புகிறேன்!

யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலே தேசியக் கொடியை ஏற்றவேண்டிய கம்பத்திலே ஒரு பௌத்த கொடி ஏற்றப்பட்டிருக்கிறதே அந்தக் கொடியை ஏன் ஏற்றினீர்கள் என்றுசில இளைஞர்கள் அப்புகையிரத நிலையத்திலே கடமையாற்றிக்கொண்டிருந்த ஊழியரொருவரைக் கேட்டார்கள். அந்த ஊழியர் அந்த விடயத்தை அங்கேயுள்ள தலைமையதிகாரியின் கவனத்துக்குக்கொண்டுவந்தார். ஆனால் நடந்தது என்ன? அப்படிக் கேட்ட அந்த இளைஞர்களின் கேள்வியை இங்கே வந்து சொல்லிவிட்டாரே அந்த ஊழியர் என்று ஆத்திரம் கொண்ட அரசாங்கம் அந்தச் சிற்றூழியரை யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலேயிருந்து தெற்கே இடமாற்றம் செய்துவிட்டது. இப்படியான அநியாயங்களையெல்லாம் செய்கின்ற அரசாங்கத்தைச் சோசலிசப் பாதையிலே செல்கின்ற அரசாங்கம் என்று எவரும் கூறுவார்களா என்று நான்கேட்கிறேன்!

சாட்டுக்காக ஓர் உயிரற்ற தமிழ்மொழிச் சட்டத்தை இயற்றி அந்தச் சட்டம் பிரமாணங்கள் இல்லாமல் இயங்காது என்று ஒருவரையறையைச்செய்து. 1960ம் ஆண்டிலே சில பிரமாணங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பின்னர் அவற்றை மீட்டு, அதன்பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி 1966ம் ஆண்டிலே கொண்டு வந்த தமிழ்மொழி பிரமாணங்களை எதிர்த்து ஊர்வலம் நடத்தி, அவற்றையும் நிறைவேற்றவிடாமல் தடுத்து, அதன்பின்னர் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரமாட்டோம் என்று சொல்லுகின்ற இந்த அரசாங்கம் தமிழ்மொழிக்கு என்ன உரிமையைக்கொடுக்க இருக்கிறது? இந்த நாட்டிலே இரண்டாவது பெரிய தேசிய இனமாக இருக்கின்ற தமிழ் இனத்தின் தாய் மொழியாகிய தமிழுக்கு எந்தவிதமான உரிமையும் கொடுக்காமல் ஓர் உயிரற்ற பிணமாகத் தமிழ்மொழிச் சட்டமொன்றை ஆக்கி வைத்து விட்டு இருக்கின்ற இந்த அரசாங்கத்துக்குத் தங்களைச்சோசலிச அரசாங்கம் என்று சொல்லுவதற்கு உரிமையிருக்கிறதா என்று நான் கேட்கிறேன்.

தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு—1956ம் ஆண்டு சிங்களமட்டும் சட்டம் வருமுன் சேர்ந்த தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு—சிங்களத் தகைமை தேவையில்லை என்று கூறிவிட்டு இப்பொழுது அவர்களுக்கும் தகைமை வேண்டும் என்று கூறி, தகைமையில்லாத பல தமிழ் உத்தியோகத்தர்களை நாள்தோறும் வேலையிலிருந்து விலக்கிக்கொண்டிருக்கும் அரசாங்கம் எந்த வழியில் சோசலிசப் பாதையிலே செல்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

ஆங்கில ஏகாதிபத்தியம் தமிழ் மக்களிலும் சிங்கள மக்களிலும் பல சிற்றூழியர்களுக்கு ஆங்கில அறிவு தேவையில்லை எனச்சொன்னது. ஆங்கிலேய ஏகாதிபத்தியமே ஆங்கில அறிவு தேவையில்லை என்று சொன்ன உத்தியோகத்தர்களுக்கு இன்று சிங்கள மொழித்தகைமை வேண்டுமென்று கூறிக்கொண்டிருக்கும் சிங்கள ஏகாதிபத்தியம் பேசுவது சோசலிசமா எனக் கேட்கவிரும்புகிறேன்!

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலே சுமை தூக்குகின்ற போர்ட்டர் ஒருவருக்கு சிங்களம்தெரியவில்லை என்ற காரணத்தினால் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். அவருக்கு இப்பொழுது 45 வயதாகிறது. நேரமே இல்லாது சுமை தூக்குகின்ற வேலை செய்யும் என்னால் எப்படிச் சிங்களம் படிக்கமுடியும்?" என்று அவர்கேட்கின்றார். சுமை தூக்குகின்ற ஒருவரை சிங்கள அறிவு இல்லை என்ற காரணத்தைக்காட்டி அவரது 45 வயதிலே, பதினைந்து வருடம்வேலை செய்ததன் பின்னர் உத்தியோகத்தை விட்டுப்போ என்று விரட்டுகிற மனிதாபிமானமற்ற செயலைச்செய்கின்ற அரசாங்கமா சோசலிச அரசாங்கம் என்று கேட்க விரும்புகிறேன்!

இலங்கை வானொலியிலே தமிழனைப் பற்றியோ அல்லது தமிழைப் பற்றியோ வசனம் ஒரு பாட்டையும் பேசக் கூடாது என்று தடைபோடுகிறார்கள். இவ்வாறு தமிழன், தமிழ்மொழி என்று சொல்வதற்கு அஞ்சுகின்ற அரசாங்கமா சோசலிசப் பாதையிலே செல்லுகின்ற அரசாங்கம் என்று கேட்க விரும்புகின்றேன்.

3,000 பஸ் வண்டிகளை இந்த நாட்டிலே இறக்குமதி செய்து விட்டு, 22 மாவட்டங்களில் ஒரு மாவட்டமாகிய யாழ்ப்பாணத்துக்கு 30 பஸ் வண்டிகளை மாத்திரம் அனுப்பி வைத்தமை எந்தவகையான சோசலிசம் என்று கேட்கவிரும்புகிறேன்

### பிரிவினையிலேயே உரிமை பிறக்கும்!

"அடுத்த தேர்தலை எங்களுடைய கட்சி, இந்த நாட்டிலே தனித் தமிழ் ஈழம் அமைப்பதற்கு ஒரு தமிழரின் பொது வாக்கெடுப்பாகப் பயன்படுத்தும் அந்தத் தேர்தலுக்குப் பின்னர் நாங்கள் எங்களுடைய அரசியல் நிர்ணய சபையை அமைப்போம். எங்களுடைய பாராளுமன்றத்தையும்அமைப்போம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகிவரும் வரையிலே இந்தத் தேசிய அரசுப்பேரவையை எங்களுடைய உரிமைப் போராட்டத்துக்காகப் பயன்படுத்திக்கொண்டிருப்போம். நாங்கள் சமாதானமான முறையிலே—தனித்தனியாகப் பிரிந்து வாழும் சூழ்நிலையிலேதான், இந்த நாட்டிலே சிங்கள மக்கள் எங்கள் தொல்லையின்றி வாழவும், தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளோடு வாழவும் வழிபிறக்கும். அன்றேல், நாங்கள் எங்கள் இளைஞர்களை அடக்கமுடியாத நிலை உருவாகி அது உக்கிரமடைந்து, ஒரு பெரும்மோதலையே ஏற்படுத்தும்."

—பேரவையில் பண்டிதர் இரத்தினம்

22 மாவட்டங்களிலே ஆறுவது, ஏழாவது பெரிய மாவட்டமாக இருப்பது மாத்திரமின்றி, இன்று இ. போ. ச.க்கு வருமானத்தைக் கொடுப்பதிலே முன்னணியில் நிற்கும் ஒரு மாவட்டத்துக்கு இறக்குமதி செய்த 3,000 பஸ் வண்டிகளில் 30 பஸ் வண்டிகளை மாத்திரம் அனுப்பிவைத்து விட்டு நாங்கள் சோசலிசப் பாதையிலே செல்கிறோம் என்று சொல்வது நியாயமா?

யாழ்ப்பாணத்திலுள்ள பதினொரு தொகுதிகளிலும் ஒரு தொகுதிக்கு 5 பேர் வீதம் பஸ் கொண்டக்டர்களை — வசு நடாத்துநர்களை — தெரிந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களைக் கொண்டு காசைச் செலவழிக்கச் செய்துவிட்டு 1972ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையும் 55 தமிழ் இளைஞர்களுக்கு உத்தியோகம் கொடுக்காமல் தட்டிக்கழித்துக் கொண்டு 5,000க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களுக்கு உத்தியோ-

### "உடன்படிக்கைகளுக்கு இனி நாம் தயாராக இல்லை!"

கம் கொடுத்துக்கொண்டு வருகின்ற இந்த அரசாங்கத்தை சோசலிச அரசாங்கம் என்று எப்படிக் கூறலாம்?

இந்த அரசாங்கம் எத்தனையோ பாலங்களை, பெருவீதிகளை, மீன்பிடித் துறைமுகங்களை, தொழிற்சாலைகளை அமைக்கின்றது. ஆனால் காங்கேசன்துறைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. மயிலிட்டியிலுள்ள மீன்பிடித் துறைமுக வேலைத்திட்டத்தை வேகத்தில் செய்கின்றன. பூநகரிப் பாதையிலுள்ள மகாதேவபுரம், ஊர்காவற்றுறை காரைநகருக்கிடையே போடப்பட வேண்டிய பாலம் முதலிய எத்தனையோ வேலைகளை இந்த அரசாங்கம் கடந்த ஆறு ஏழு ஆண்டுகளாக ஏன் தட்டிக்கழித்துக் கொண்டு வருகின்றது என்பதைக் கேட்கவிரும்புகின்றேன். நான் கிளிநொச்சிப் பிரதிநிதியாக இருந்தபோது மகாதேவா பாலத்திற்கு 28 இலட்ச ரூபா வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்குவித்தேன். ஆனால், இன்றுவரை இந்தப் பாலம் கட்டிமுடிக்கப்படவில்லை. காங்கேசன் துறைத் துறைமுக வேலைகள் தொடங்கப்பட்டன. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் அந்த வேலைகள் இடையில் நிறுத்தப்பட்டன. இவ்வாறு தமிழ்ப் பகுதிகளை ஒதுக்கிவிட்டு சோசலிசம் பேசுகின்றது இந்த அரசாங்கம்!

வெளிநாடுகளிலிருந்து இந்த நாட்டிற்கு வருகின்ற விளையாட்டு அணிகள், கலைஞர்கள் சுற்றுலாப் பயணத்தினர் முதலான எல்லோரையும் சிங்களப் பகுதிகளுக்கே கூட்டிச் செல்கிறது இந்த அரசாங்கம். யாழ்ப்பாணத்திற்கோ மட்டக்களப்புப் பகுதிக்கோ இவர்களைக் கூட்டிச் செல்லாது புறக்கணிக்கின்ற ஒரு நிலையைத்தான் நாங்கள் காண்கின்றோம். இப்படி எல்லாம் செய்துகொண்டு எப்படி நீங்கள் சோசலிசம் பேசமுடியும் என்று நான் கேட்கின்றேன்.

நாங்கள் ஒன்று இரண்டு விடயங்களில் மட்டும் புறக்கணிக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிலே அநியாயமான முறையில் ஒன்பது பேர் கொல்லப்பட்டார்கள். அந்த ஒன்பது பேர் கொல்லப்பட்டது பற்றி விசாரிக்க ஒரு விசாரணைக்குழு நிர்ணயிக்கும்படி இந்த அரசாங்கத்தை நாங்கள் கேட்டோம். இந்த அரசாங்கம் அந்தக் கோரிக்கையை மறுத்துவிட்டது. மறுசிறு எனப்படும் கொலைக் குற்றவாளி ஒருவர் தூக்கிலிடப்பட்டார். அவர் தூக்கிலிடப்பட முன்னர் இறந்தாரா அல்லது அதற்குப் பின்னர் இறந்தாரா என்பதை ஆராய ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. ஆனால் ஒன்பது தமிழர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டதை விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க அரசாங்கம் முன்வரவில்லை.

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் தூக்கிலிடப்பட முன்னர் இறந்தாரா அல்லது பின்னர் இறந்தாரா என்பதை விசாரிக்க ஒரு குழுவை நியமிக்கக் கூடாது அல்லது வேண்டாம் என்று நான் இங்கே சொல்லவில்லை. ஆனால் ஒன்பது தமிழர்களின் உயிர்களுக்கு என்ன நடந்தது என்பதை விசாரிக்க இந்த அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கவில்லை என்பதே எனது குற்றச்சாட்டாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளைகளும் தமிழ் அமைச்சர் என்று சொல்லப்படும் தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சரும் இந்த ஒன்பது பேர் கொல்லப்பட்டது பற்றி ஓர் ஆணைக் குழுவை நியமிக்கும்படி கேட்டும் அந்த ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. இதுவா சோசலிசப்பாதை என்று கேட்கிறேன்.

அந்த ஒன்பது பேரும் இறந்த இடத்தில் ஒரு சின்னத்தைத் தமிழ் இளைஞர் பேரவையினர் எவ்வளவோ பணம் செலவுசெய்து உருவாக்கினர். தமிழ் மக்கள் மலரிட்டு அதற்கு வணக்கம் செலுத்தினர். அந்தச் சின்னத்தை இரவிலே பொலிசார் மூலம் உடைத்துவிட்ட இந்த அரசாங்கம் எப்படிச் சோசலிசம் பேச முடியும் என்று கேட்கிறேன்.

இந்நிலையில் நாம் இனிமேல் எந்தவிதமான உடன்படிக்கைக்கோ எந்தவிதமான பேச்சுவார்த்தைக்கோ வரமுடியாது. நாம் முன்னர் எங்களை ஆண்டோம். நாம் எங்களை மீண்டும் ஆளும் அந்தக் கொள்கைக்காகவேபாடுபடவேண்டும், போராடவேண்டும் என்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம் என்பதைத்தான் மீண்டும் வற்புறுத்த விரும்புகின்றேன்.

—10-11-76ல் தேசிய அரசுப் பேரவையில் பேசியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களே! தமிழ் ஈழத்தை விட்டு வெளியேறுங்கள்!!

## சமாதானமாக இதைச் செய்யாவிட்டால் வல்லரசுத் தலையீடே ஏற்படும்!

### தேசிய பேரவையில் கதிரவேற்பிள்ளை!

இலங்கை முழுவதும் ஒரு குடியரசாக இருக்கிறது என்ற அடிப்படையிலே இலங்கை முழுவதற்குமான ஒரு திட்டமாக இந்த வரவுசெலவுத் திட்டம் அமைந்திருக்கின்றது. நாங்கள் இந்தப் புதிய குடியரசு அமைப்பை ஏற்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆதலினாலே முக்கியமாக எங்கள் கோணத்திலிருந்து பார்த்தால் ஒரு சிங்கள அரசாங்கம் தமிழ் ஈழத்திற்கும் சேர்த்து அமைக்கின்ற வரவுசெலவுத் திட்டமாகவும் இது அமைகின்றது. இந்தச் சூழ்நிலையில் தமிழ் ஈழத்தினுடைய அபிலாசைகளையும் தமிழ் ஈழத்தினுடைய தேவைகளையும் தமிழ் ஈழத்தினுடைய பொருளாதார நிறைவுகளையும் தமிழ் ஈழத்தினுடைய அபிவிருத்தி வேலைகளையும் திருப்திகரமாக அறிந்து நிறைவேற்றக்கூடிய ஒரு வரவுசெலவுத் திட்டமாக இந்த வரவுசெலவுத் திட்டம் இல்லை என்பது உண்மை.

இந்தப் புதிய அரசியல் அமைப்பை நாங்கள் ஏன் ஏற்கவில்லை? ஒரு நாட்டிற்கு ஒரு வரவுசெலவுத் திட்டம் அமையும்போது அதை இன்னொரு நாட்டிற்கும் சேர்த்து அமைப்பது ஏற்கக்கூடிய ஒரு விடயம் அல்ல என்பதை நாங்கள் இங்கு தெளிவாகச் செல்லவேண்டும்.

இரண்டாயிரம் வருடங்களாக இந்தத் தீவிலே நாங்கள் இருவேறு இனங்களாக வாழ்ந்து வந்திருக்கிறோம். சிங்கள அரசர்களும் தமிழ் அரசர்களும் முழு நாட்டையும் படையெடுப்பிலே காலத்துக்குக் காலம் பொது ஆட்சியில் கொண்டுவந்தாலும் சரித்திர ரீதியாக நாங்கள் இருவேறு இனங்கள் என்பதை மறுக்கமுடியாது. அதுமட்டுமல்ல இந்த நாட்டிற்கு ஐரோப்பிய ஆட்சி வரமுன்னர் நாங்கள் இருவேறு இனங்களாக இருவேறு நாட்டு மக்களாக வாழ்ந்து வந்திருக்கிறோம்.

போர்த்துக்கேயர் இந்த நாட்டிற்கு வந்து தமிழ் இராச்சியத்தைப் போரில் வென்றபோது எங்கள் நாட்டையும் தமிழ் ஈழத்தையும் தமிழ் ஈழமக்கள் அரசுரிமையையும் கைப்பற்றிக்கொண்டார்கள். அவர்கள் பின் வந்த ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் இந்த நிலையிலே தான் இந்த மூன்று நாடுகளையும் ஒன்றுக்கினார்கள். அதாவது தமிழ் ஈழத்தையும் கோட்டையும் இராச்சியத்தையும் ஒன்று படுத்தினார்கள். முக்கியமாக 1833ஆம் ஆண்டில் இலங்கைத் தீவில் இருந்த மூன்று இராச்சியங்களையும் அதாவது நாடுகளையும் ஒரு கொலனி ஆக்கினார்கள். ஆதலினாலே இந்த வரவுசெலவுத்திட்டம் ஆங்கிலேயர் சுமத்திய கொலனிக்கொள்கையிலிருந்து வளர்ந்து வந்திருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இலங்கைத் தீவில் பிரிந்து வாழப் பழகிக்கொண்ட நாங்கள், ஆங்கிலேயர் ஆட்சியில் ஒரு சிறைக்குள் பூட்டப்பட்டவர்களாக இருந்தோம். அந்தச் சிறைக் கதவு [illegible] திறந்தபின் நாங்கள் எங்கள் எங்கள் வீடுகளை திருத்தி நிர்மாணித்து வாழ வேண்டியவர்கள். அப்படிச் செய்யாமல் ஓர் இனம் மற்ற இனத்தை ஆளும் நிலைமையையே இந்த வரவுசெலவுத் திட்டம் காட்டுகின்றது. ஆதலினாலேதான் ஓர் அடிப்படையான கொள்கையோடு வரவுசெலவுத்திட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம்.

சேர்ந்து வாழலாம் என்று ஆங்கிலேயர் கற்பித்த கற்பனையோடு 25 வருடங்களுக்கு மேலாக இயங்கிப் பார்த்தோம். எங்களுக்குள்ளேயிருக்கின்ற அடிப்படை வித்தியாசம் அடிப்படை வேற்றுமை எங்களைச் சேர்ந்து வாழ்வதற்கான வழிகளைக் கற்பிக்கவில்லை. அதற்கு மாறாக, பிரிந்து வாழுகின்ற பழைய — உண்மையான சரித்திரத் தீர்வைதான் எங்களுக்குக் காட்டியிருக்கிறது.

சிலவருடங்களுக்கு முன்னர் எங்களுடைய தலைவர் சொன்னார். "நீங்கள் எங்களைப் பிரிவினைக்குத் தள்ளுகிறீர்கள்" என்று. இன்றைக்கு அது முழுவதும் உண்மையாகிவிட்டது.

சிங்கள அரசாங்கங்கள், காலத்திற்குக் காலம் எங்களுடைய குடியுரிமை, வாக்குரிமை, நில உரிமை ஆகியவற்றைப் பறித்து, உத்தியோகத்திலேயிருக்கின்றவர்களின் உரிமைகளைப் பறித்து எங்கள் கல்வி உரிமைகளைப் பறித்து, அபிவிருத்தி உரிமைகள் எல்லாவற்றையுமே பறித்து எங்களை மேலும் அடிமைகளாக்கி எங்களுடைய வாழ்வைச் சிதைக்கின்ற முறையிலே இயங்கி வந்திருக்கின்றன.

தமிழ் ஈழத்திலே, அபிவிருத்தி, 400 வருடங்களாக நடக்கவில்லை. 400 வருடங்களாக அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த தமிழ் ஈழம், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், இன்றைக்கு சிங்களவர் ஆகிய நான்கு அந்நிய இனங்களின் கீழ் ஆளப்பட்டு 400 வருடங்களுக்கு எந்த அபிவிருத்தியையும் காணவில்லை என்பதை நீங்கள் நன்றாக விளங்கிக்கொள்ளவேண்டும்,

நாங்கள் மீண்டும் தமிழ் ஈழத்திலே சுதந்திரமாக வாழவேண்டுமென்று விரும்புகிறோம். உலகம் ஏற்ற சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையிலும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சரித்திரத்தில் கண்ட தங்கள் வளர்ச்சியில் பிரிந்து வாழும் தீர்ப்பை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலும், போர்த்துக்கேயர் கையிலே நாம் இழந்த நாட்டையும் அரசியல் உரிமைகளையும் மீளவும் பெறவேண்டுமென்ற அடிப்படையிலும் தமிழ் ஈழத்தை தனியான சுதந்திரநாடாக மீண்டும் கண்டு எங்களுடைய நாட்டின் அபிவிருத்தியை — எங்களுடைய நாட்டின் வளர்ச்சியை — நாமே நிர்மாணித்து நடத்தவேண்டும். ஒரு சிங்கள அரசாங்கம் அதைச்செய்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆதலால் இந்த வரவுசெலவுத் திட்டம் ஓர் ஏகாதிபத்தியக் கொள்கையைக் காட்டுகிறதேயொழிய, வேறு எதையும் காட்டுவதாகத் தெரியவில்லை. பழைய, ஆங்கிலேயர் கற்பித்த, ஏகாதிபத்தியக் கொள்கையை மட்டுமல்ல, இன்று அதை ஏற்று நடத்துகிற சிங்கள மக்களுடைய ஏகாதிபத்தியக் கொள்கையை எடுத்துக் காட்டுகிறது என்றுதான் சுருக்கமாகச் சொல்லவேண்டும்.

இருபத்தைந்து வருடங்களாக இந்த நாட்டை ஒற்றுமைப்படுத்த வேண்டுமென்று. தமிழர்களையும் சிங்களவர்களையும் ஒற்றுமைப் படுத்த வேண்டும் என்று சிங்கள அரசுகள் இயங்கி தோல்வி கண்டனவேயொழிய ஒற்றுமை காணவில்லை. அநியாயமாக, ஒவ்வொன்றாக தமிழர்களுடைய ஒவ்வொரு உரிமையையும் பறிக்கச்செய்த முயற்சி கடைசியில் வெற்றி காணாமல் தமிழ் மக்கள் தனியாக வாழ்ந்தார்கள் என்ற பழைய சரித்திரத் தீர்வையும் தங்களுடைய அரசுரிமைகளை மீளப்பெற்று தங்கள் நாட்டைத் தாமே ஆள வேண்டுமென்ற அவர்களது உரிமையையும் சுயநிர்ணய உரிமையாக இயங்க வேண்டிய தத்துவத்தையும் அவர்கள் ஏற்கும்படியாகத் தள்ளிவிட்டிருக்கின்றனர். ஆதலால் இனிமேல் இந்த இரண்டு நாடுகளும் ஒன்றாக இணைந்து ஒரு வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ஒற்றுமையாக இயங்கும் என்பதை நீங்கள் கனவிலும் நினைக்கக் கூடாது என்று மிகவும் தெளிவாகச் செல்ல விரும்புகிறேன்.

இன்று பிரதமரும் மற்றவர்களும் இலங்கையில் இருக்கும் இந்தப் பிரச்சினை — ஆதாரமான, அடிப்படையான ஒரு பிரச்சினை. இரு நாடுகளுக்கும், இரு இனங்களுக்குமிடையே இருக்கும் சர்வதேசப் பிரச்சினை என்று கருதாமல் இது உள்நாட்டுப் பிரச்சினை இதைப் பேசாமல் விட்டாலும்சரி, பேசினாலும் சரி எல்லாம் ஒன்றுதான் என்று தவறாக நினைத்து வருகிறார்கள். இன்று எப்படியிருந்தாலும் மற்றப் பக்கத்திலே, இலங்கைக்குச் சூழ இருக்கும் இந்து சமுத்திரப் பிரதேசத்தை ஓர் அமைதிப் பிரதேசமாக வைத்திருக்க வேண்டும் என்றும் வல்லரசுகள் இங்கேயிருந்து வெளியேறவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்து அழைப்பு விடுகிறார்கள். அதனால் இலங்கையிலே இரண்டு இனப் பிரச்சினை, இரண்டு நாட்டுப் பிரச்சினை என்றிருக்கும் போது வல்லரசுகள் வரக் கூடாது. மற்றவர்கள் தலையிடக் கூடாது என்று சொல்வதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை.



இன்று நாம் அகிம்சை வழியிலே எங்களுடைய விடுதலை இயக்கத்தை நடத்துவதனால்தான் வல்லரசுகளோ, மற்றவர்களோ, வெளிநாடுகளோ இந்தப் பிரச்சினையில் தலையிடாமல் இருக்கிறார்களேயொழிய இங்கே பிரச்சினை இல்லை என்ற காரணத்துக்காக அவர்கள் தலையிடாமல் இருக்கவில்லை. இந்தப் பிரச்சினை இன்று எங்களைத் தொடர்ந்து எதிர் மோதல் என்ற நிலைக்குத் தள்ளுமானால் கட்டாயம் வெளிநாடு தலையிட இடமுண்டாகும்; அமைதிப் பிரதேசம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லாமற்போகும் என்பதை சிங்கள அரசாங்கமும் சிங்கள எதிர்க்கட்சியும் நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆதலால், எங்களுடைய பழைய சிந்தனைகளை, ஆங்கிலேயர் கற்பித்த கொலனித் திட்டங்களை, அந்த அமைப்புக்களைக் கைவிட்டு நாம் சுதந்திர மக்களாக வாழவேண்டும். இத்தீவிலே நாம் முன்னர் சுதந்திரமாக வாழ்ந்தோம். சிங்கள மக்கள் சுதந்திரமாக வாழ்ந்த காலத்தில் எல்லாம் நாமும் சுதந்திரமாக வாழ்ந்தோம். எனவே, அந்த அடிப்படையில் நாம் நம்மை மீண்டும் சுதந்திர மக்களாக ஆக்கி, இரண்டு இனங்களும் தங்களுடைய அரசுகளைத் தனித்தனி நிறுவி, நட்புடைய நாடுகளாக வாழவேண்டும் என்றுதான் நாம் கேட்கிறோம்.

(12-11-76-ல் தேசிய அரசுப் பேரவையில் பேசியது)

### [illegible] ஏ. வி. சங்க மன்னார்க் கிளை இரங்கல்

அரசாங்க எழுதுவினைஞர் சங்க—மன்னார்க் கிளை. விடுத்துள்ள அனுதாபச் செய்தி வருமாறு:—

"முதுபெரும் சட்ட அறிஞரும் அரசியல் ஞானியுமான திரு. திருச்செல்வம் கியூ. சி. அவர்களைப் பறிகொடுத்த நிலையில் பரிதவிக்கிறது தமிழினம். இன்னும் சில காலமாவது அவரின் சேவையைப் பெறுவதற்கு தமிழினம் கொடுத்து வைக்கவில்லை. மொழிவழித் தொழிற்சங்கங்களுக்கு, அன்னாரின் மறைவு ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக!"

## பொதுத்தேர்தலும் தமிழ் தேசிய இனமும்!

"சிங்கள மக்களுக்குள்ளே ஒரு கட்சி எங்களுக்குச் சனநாயகம் தரவும் மற்றக் கட்சி சோசலிசம் தரவும் முனைகின்றன. தமிழ்மக்களுக்கு— தமிழ் ஈழத்தில் வாழ்கிறவர்களுக்கு சனநாயகமும் தெரியாது சோசலிசமும் தெரியாது அவற்றைக் கொடுப்பது சிங்கள மக்களின் பெரும் பொறுப்பு என்று நினைத்து அவர்கள் இயங்குகிறார்கள். இது ஆங்கிலேயன் கறுப்பு மக்களுக்கு எடுத்த பொறுப்புப்போல, கடவுள் கொடுத்த பொறுப்புப்போல அவர்கள் எங்களைச் சோசலிசப் பாதையிலும் சனநாயகப் பாதையிலும் முன்னேற்றும் நோக்கத்தோடு இயங்குகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் காரணமாகத்தான் இன்று பொதுத்தேர்தலைப் பற்றிப் பல பேச்சுக்கள் வருகின்றன. பொதுத்தேர்தல் நடைபெற வேண்டும் என்று சனநாயகவாதிகள் சொல்கிறார்கள் சோசலிசத்தை வளர்ப்பதற்கு பொதுத்தேர்தல் தேவையில்லை என்று வேறு சிலர் சொல்கிறார்கள்:

எங்களைப் பொறுத்தமட்டிலே அந்நிய நாடான சிங்கள நாட்டிலே பொதுத் தேர்தல் நடந்தால் என்ன, நடக்காவிட்டாலென்ன? அவர்கள் எங்களை ஆளாமல் இருந்தால் போதும்; எங்களை விட்டால்போதும் என்பதுதான் எங்களுடையகொள்கை. ஆதலால் பொதுத்தேர்தலை முக்கிய ஒரு பிரச்சினையாக நாங்கள் நினைக்கவில்லை. அதில் தலையிடவும் நாங்கள் அதிகம் விரும்பவில்லை. எங்களுடைய பிரச்சினையை சிங்களத் தலைவர்கள் அரசாங்கத்தில் இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியில் இருந்தாலும் சரி சேர்ந்து தீர்ப்பதுதான் நல்ல ஒரு முடிவு என நாங்கள் கருதவேண்டும்.

—வரவு செலவுத்திட்ட விவாதத்தில் சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# 'தீரு' மறைவுக்கு நாடெங்கிலுமிருந்து இரங்கற் செய்திகள்!

தமிழினத்துக்கு நெருக்கடியும் சோதனையும் நிறைந்த இச்சமயத்தில் அறிவும் ஆற்றலும், மதிநுட்பமும் மிகுந்த பெரியார் திருச்செல்வம் அவர்களின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்றும் அமரருக்கு செய்யகூடிய கைம்மாறு அவர்காட்டிய வழியிற் சுதந்திரத் தமிழ் ஈழம் ஒன்றை உருவாக்குவதற்கு நாம் உழைப்பதே என்றும் வலியுறுத்தி பின்வரும் பொதுமன்றங்களும் அமைப்புக்களும் இரங்கற் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

(1) அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் செ. அருச்சுனு.

(2) துறைமுக நாவாய் இயக்குனர் கழகம்.

(3) தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதுக்குடியிருப்புக் கிளை சார்பில் திரு. செல்லையா மெட்ராஸ்மயில்.

(4) புத்தளம்தமிழ்பேசும் இளைஞர் மன்றம்.

(5) களுதாவளை த. வி. கூ. கிளை சார்பில் திரு. ஞா. பழனித்தம்பி.

(6) தமிழ் இளைஞர் பேரவையின் காரை தீவுக் கிளை சார்பில் செயலாளர் கே. பி. சோமநாதன், தலைவர்—ம. பொ. நாதன்

(7) அனுராதபுரம் புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கத்தினர்.

(8) வவுனியா சுத்தானந்த இந்து சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் நா. சேனாதிராசா.

(9) ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவையின் சார்பில் அதன் இணைச்செயலாளர் அருள் இராசேந்திரன்.

(10) அம்பாறை — மட்டக்களப்பு பிரதேச தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் இரா. மதுரநாயகம்.

(11) மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் க. மகாதேவா.

(12) இந்து இளைஞர் பேரவை கோறளைப்பற்றுக் கிளை செயலாளர் க. கிருஷ்ணபிள்ளை.

(13) தமிழ் இளைஞர் பேரவையின் திருகோணமலைத் தொகுதி அமைப்பாளர் மு. பாலசுந்தரம்.

(14) வடஅல்வை தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் அல்வை தர்மநாதன்.

(15) வண்ணைநகர் இளைஞர் முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் த. சிவானந்தரஞ்சன்.

(16) இலங்கைத் தமிழணிச்சபை செயலாளர் சிவ நவஜோதி.

(17) உடவளவ, அம்பாறை பிரதேசங்களைச் சேர்ந்த அகில இலங்கை சனிட்டரி தொழிலாளர்கள் சங்கம்.

(18) நாவலப்பிட்டியைச் சேர்ந்த இ. பி. குமார்


## சுடர் கார்த்திகை இதழில்....

- காசி ஆனந்தன் எழுதும் "சிறைச்சாலை இனிக்கும்" கணைகள் (கவிதை)
- கனக—செந்திநாதன் — 'சிற்பி' எழுதும்கட்டுரை
- அகிலனின் "முதல் அனுபவம்"
- மற்றும் சுவையான அம்சங்களுடன்,

அடுத்த கிழமை எங்கும் கிடைக்கும்
விலை ரூபா ஒன்று மட்டுமே.

## செல்லமகால் 5வது வாரம்

உங்கள் அபிமான
- மரிக்கார்
- அப்புக்குட்டி
- உபாலி
- ஐயர்

வானொலியில் கும்மாளமடித்த
கோமாளிகளை திரையில்
பார்த்து மகிழப் போகின்றீர்கள்...

அமர் ஜோதி மூவிஸ்
அளிக்கும்

எஸ். ராம்தாஸின்

# கோமாளிகள்

கதை—வசனம்
எஸ். ராம்தாஸ்

ரீகல் மட்டுநகர் 27ம் திகதி முதல் **அவள்** புத்தம்புதிய கொப்பி

## கெயிட்டி 2வது வாரம்

எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
முத்துராமன் நடித்த-

# ஒரு தாய் மக்கள்

(புத்தம் புதிய கொப்பி)

கிங்ஸ் பதுளை 27ம் திகதி முதல்
**சுமதி எங்கே?**

## கிங்ஸ்லி-லிடோ 11வது வாரம்

(கொழும்பு) (யாழ்நகர்)

சிவாஜி கணேசன், ஜெயலலிதா, மஞ்சுளா
மேஜர் சுந்தரராஜன், முத்துராமன்,

மற்றும் பலர் நடித்த

# அவன் தான் மனிதன்

(ஈஸ்ட்மென் கலர்)

திரைக்கதை டைரக்ஷன் — A. C. திருலோகச்சந்தர் M. A.

## பிளாசா கடைசி வாரம்

# கோமாளிகள்

3-ம் திகதி முதல்
**மன்னவன் வந்தானடி** (கலர்)

## கெப்பிட்டல்

எச். சி. பிலிம்ஸ்
**சுமதி எங்கே?**

எதிர்பாருங்கள்

தேவரின் **திருவருள்** ஈஸ்மன் கலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட் [illegible] கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976-ம் வருடம் நவம்பர் மாதம் 28-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.